பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 04 செவ்வாய்க்கிழமை 18.05.2021 கதிர் 60

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்: நாடாளுமன்றத்தில் இன்று அஞ்சலி

### கறுப்பு உடையில் கூட்டமைப்பு எம்.பிக்கள்



(ந.லோகதயாளன்)

இறுதிப் போரின்போது முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் நாடாளுமன்றவளாகத்தில் இன்று அஞ்சலி செலுத்தினர்.

கறுப்பு உடைகளை அணிந்து அவர்கள் இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, இவர்கள் சபை நடவடிக்கைகளிலும் கறுப்பு உடையிலேயே கலந்துகொண்டனர்.

2

## மே 24, 25 அரச விடுமுறை தினங்களாக அறிவிப்பு

மே 24 மற்றும் 25 ஆம் திகதிகள் விசேட அரச விடுமுறை தினங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

26 மற்றும் 27ஆம் திகதிகள் வெசாக் விடுமுறை என்பதால் அதற்கு முதல் நாட்களான 24, 25 ஆம் திகதிகளையும் விடுமுறை தினங்களாக அறிவிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இந்த விடுமுறை வங்கி, வர்த்தக நிறுவனங்களுக்குப்

2

## அரச இணையதளங்கள் மீது சைபர் தாக்குதல்கள்

இலங்கையின் அரச இணையதளங்கள் மீது இன்று அதிகாலை சைபர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சு, ரஜரட்ட பல்கலைக் கழகம் மற்றும் இலங்கைக்கான சீனத் தூதரகம் ஆகியவற்றின் உத்தியோகப்பூர்வ இணையதளங்கள் மீதே சைபர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தாக்குதல்களுக்கு உட்பட்ட இணையதளங்கள் சீர்செய்யப்பட்டன என்று இலங்கை விமானப்படையின் பேச்சாளர் துஷான் விஜேதிலக தெரிவித்துள்ளார்.

2

# அரச படைகளின் தடையைத் தாண்டி தமிழர் தாயகத்தில் நினைவேந்தல்!

### முள்ளிவாய்க்காலிலும் கொழுந்து விட்டெரிந்தது சுடர்







(ந.லோகதயாளன்)

இறுதிக்கட்டப் போரின்போது முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த தமிழ் உறவுகளை நினைவு கூர்ந்து வடக்கு, கிழக்கில் பல இடங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்பட்டன. இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் அரச புலனாய்வுத்துறையினர் ஆகியோரின் தடைகளையும், அச்சுறுத்தல்களையும் தாண்டி உணர்வுபூர்வமாக நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

2

## நினைவேந்தலுக்கு அனுமதித்தமை தொடர்பில் பல்கலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கைது

### கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை மாணவர்கள் நடத்த அனுமதித்தமை தொடர்பில் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

2

## முன்னாள் எம்.பி. துரைரெட்ணசிங்கம் கொரோனாத் தொற்றால் காலமானார்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர்காமத்தம்பி துரைரெட்ணசிங்கம் காலமானார்.

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த அவர், கந்தளாய் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்றிரவு காலமானார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான அவர், இறக்கும்போது 80 வயதாகும்.

2

### வடக்கு, கிழக்கு மக்களின்

## அகதி வாழ்க்கை யுகத்தை நாம் முடித்து வைத்தோம்!

### சபையில் மஹிந்த பிதற்றல்



வடக்கு, கிழக்கு மக்களின் அகதி வாழ்க்கை யுகத்தை தாம் முடிவுக்குக் கொண்டுவந்ததாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

போர் நிறைவின் நினைவு தினத்தை முன்னிட்டு நாடாளுமன்றத்தில் இன்று

2

## 2/3 பங்கு பெரும்பான்மை, சர்வஜன வாக்கெடுப்பு துறைமுக நகர சட்டத்தை நிறைவேற்ற அவசியம்

### மாற்றுவழிகளையும் பரிந்துரைத்தது உயர்நீதிமன்றம்

கொழும்பு,மே18

கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு விசேட பெரும்பான்மை மற்றும் சர்வஜன வாக்கெடுப்பின் மூலமே நிறைவேற்றப்பட வேண்டும் என்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

குறித்த சட்டமூலம் இலங்கையின் அரசமைப்புக்கு முரணானது என்று 19 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில், அதற்கானதீர்ப்பைஉயர்நீதிமன்றம்சபாநாயகருக்குச் சமர்ப்பித்திருந்தது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் இன்று நாடாளுமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தின் சில பிரிவுகள்

2

## 2/3 பங்கு பெரும்பான்மை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசமைப்புடன் முரண்படுகின்றன என்றும் உயர்நீதிமன்றம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவித்துள்ளது.

அரசமைப்புடன் முரண்படும் பகுதிகளைச் சீர்திருத்த முடியுமான விதம் தொடர்பாகவும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு 62 பக்கங்களில் வெளிவந்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனேக அலுவிஹார, பிரியந்த ஜயவர்தன, முர்து பெர்னாண்டோ மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோரைக் கொண்ட நீதியரசர்கள் குழாம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டியவை, அத்தோடு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களிடம் அனுமதி பெறப்பட வேண்டியவை, அதற்காகச் செய்யப்படக் கூடிய மாற்று வழிகள் என்பவை எல்லாம் இத்தீர்ப்பில் உயர் நீதிமன்றினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

## முன்னாள் எம்.பி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கிழக்கு - சேனையூரில் 1941ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி பிறந்த அவர், பாடசாலைகள் பலவற்றில் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றினார். பின்னர், திருகோணமலை பிராந்தியக் கல்வித் திணைக்களத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும், அதனைத் தொடர்ந்து தம்பலகாமம் கோட்டக்கல்வி அதிகாரியாகவும் பணியாற்றினார்.

2001ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக திருகோணமலை மாவட்டத்தில் அவர் போட்டியிட்டார். அதில் அவர் வெற்றி பெறாத போதும், தேசியப் பட்டியல் உறுப்பினர் மு.சிவசிதம்பரம் உயிரிழந்ததைத் தொடர்ந்து அவருக்குப் பதிலாக 2002ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

பின்னர் 2004ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்ட துரைரெட்ணசிங்கம், அதில் வெற்றியடைந்து மீண்டும் நாடாளுமன்றம் சென்றார்.

அதன்பின்னர் 2015ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் அவர் மீண்டும் போட்டியிட்டு அதில் தோல்வியடைந்தபோதும், கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சி என்பவற்றின் அரசியல் உயர்பீட உறுப்பினரான அவர், நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் காலப்பகுதியில் திருகோணமலை மாவட்டத்தில் மூவின சமூகத்துக்கும் சேவை செய்த சிறந்த அரசியல்வாதியாவார்.

## அரச படைகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தவகையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்குள் மாணவர்கள் சிலர் அங்குள்ள முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்தில் தீபமேற்றி அஞ்சலி செலுத்தினர்.

அதேவேளை, யாழ். மாநகர சபையில் மேயர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தலைமையில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. அங்கு விளக்குகளை ஏற்றி மாநகர உறுப்பினர்கள் பலர் அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் அலுவலகத்திலும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தனது இல்லத்திலும், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நந்திக்கடல் பகுதியிலும், வேலன் சுவாமிகள் முள்ளிவாய்க்காலிலும் அஞ்சலி செலுத்தினர்.

முள்ளிவாய்க்கால் உள்ளிட்ட முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்கள் நேற்றிரவு முதல் தனிமைப்படுத்தல் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் அந்தப் பகுதியில் மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே கிழக்கிலும் பல இடங்களில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

## அரச இணைய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை விமானப்படையின் இணைய பாதுகாப்புப் பிரிவு, இந்த சைபர் தாக்குதல் தொடர்பாக ஸ்ரீலங்கா கணிணி அவசர தயார்நிலை அணிக்கு அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலை மேற்கொண்டவர்கள் தொடர்பில் தகவல்கள் வெளியிடப்படவில்லை.

இலங்கையில் இறுதிப் போர் முடிவுக்கு வந்த தினமான மே 18 இல் இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மே 24, 25 அரச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருந்தாது என்று பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரையில் இரண்டு கட்டங்களாக நாட்டில் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்படவுள்ள நிலையில், இந்த வார இறுதியுடன் இணைந்ததாக அடுத்த வாரத்தை முழுமையாக விடுமுறை நாள்களாக மாற்றியமைக்கும் வகையில் இவ்வாறாக 24, 25 ஆம் திகதிகள் அரச விடுமுறை தினங்களாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

## அகதி வாழ்க்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுமார் 20 ஆண்டுகளாக எத்தருணத்திலேனும் கொல்லப்படலாம் என அச்சத்தில் வாழ்ந்த வடக்கு, கிழக்கு மக்கள் தமது வீடுகளுக்குச் சென்று கௌரவமாக வாழ்வதற்கு நாம் வழியமைத்தோம்.

போர் வெற்றி என்பது நாட்டின் ஒரு பகுதியினருக்கு மாத்திரம் கிடைத்த வெற்றி அல்ல. இந்த வெற்றியின் மூலம் பயங்கரவாதிகள் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்திய நான்கு இலட்சத்துக்கும் மேற்பட்ட பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

இந்த வெற்றி வடக்கு, மற்றும் கிழக்கு மக்களுக்கும் சொந்தமானது.

மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றம் வந்த மக்கள் பிரதிநிதிகளை விடுதலைப்புலிகள் ஆரம்பமாக இலக்கு வைத்தனர்.

போர் வெற்றியின் காரணமாக இன்று வடக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் ஆகியவற்றை சுதந்திரமாக நடத்த முடியுமாக இருக்கின்றது. வடக்கு, கிழக்கு மக்கள் பிரதிநிதிகள் நாடாளுமன்றம் வர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

அன்று போருக்குச் சென்ற எவரும் இனப்படுகொலை நிகழ்த்துவதற்காக அங்கு செல்லவில்லை. அன்று பாதுகாப்பு செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட, முன்னாள் விமானப்படைத் தளபதி ரொஷான் குணதிலக ஆகியோர் இனப்படுகொலை நிகழ்த்துவதற்காகத் தங்களது படைகளை வழிநடத்தியவர்கள் அல்லர்.

வடக்கின் அப்பாவி பிள்ளைகள், தாய், தந்தையர், அச்சமடைந்த மக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்தி போராடிய காட்டுமிராண்டித்தனமான குழுவுக்கு எதிராகவே அவர்கள் போராடினார்கள்.

அம்மக்களைக் காப்பாற்றி பயங்கரவாதிகளுக்கு எதிராக போராடுவதே எங்கள் நோக்கமாக இருந்தது.

அது இராணுவத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஒரு கடினமான சவாலாகும். அவர்கள் அதைச் செய்தார்கள் – என்றார்.

## நினைவேந்தலுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக வளாகத்துக்குள் மாணவர்களை அனுமதித்தமை தொடர்பிலும் அங்கு நடைபெற்ற நிகழ்வு பற்றியும் வாக்குமூலம் பெறுவதற்காக குறித்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதேவேளை, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை யாழ். பல்கலைக்கழகத்தினுள் மாணவர்கள் ஏற்பாடு செய்வார்கள் எனப் பல்கலைக் கழகத்தைச் சுற்றி இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முள்ளிவாய்க்கால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறிதரன், செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், இரா.சாணக்கியன், தவராசா கலையரசன் மற்றும் கோவிந்தம் கருணாகரன் ஆகியோர் இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டனர்.





விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@
gmail.com
தொலைபேசி இலக்கம்-
443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## துறைமுக நகர சட்டமூலம் விடயம் என்ன செய்யப் போகின்றது அரசு?

**கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பாக விசாரணை நடத்திய உயர்நீதிமன்றம் தனது முடிவுகளை சபாநாயகருக்கு சமர்ப்பித்திருந்தமையை அடுத்து சபாநாயகர் அதனை இன்று காலை நாடாளுமன்றத்தில் அறிவித்து விட்டார்.**

**நிச்சயமாக அரசுத் தரப்புக்கு பிடித்தமான முடிவாக இது இருக்கப் போவதில்லை என்பது தெளிவு.**

**பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரி, நீதியரசர்கள் புவனேக அலுவிகார, பிரியந்த ஜெயவர்த்தனா, மூர்து பெர்னான்டோ, ஜனக் டி சில்வா ஆகிய ஐவரடங்கிய ஆயம் ஏகமனதாகத் தனது தீர்ப்பை வழங்கியிருக்கின்றது.**

**சட்டமூலத்தின் முக்கிய சரத்துகள், உப பிரிவுகள் தொடர்பில் எட்டு விதமான முடிவுகளை உயர்நீதிமன்றம் முன்வைத்திருக்கின்றது.**

**உயர் நீதிமன்றத்தின் பரிந்துரையில் உள்ள மாற்றங்களை உள்ளடக்கினாலும் கூட சில பிரிவுகளை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு அவசியம்.**

**மற்றும் சில சரத்துக்கள், பிரிவுகளை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களின் அனுமதியும் பெறப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியிருக்கின்றது.**

**உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டிய மாற்றங்களைச் செய்வதோ அல்லது உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியபடி சில சரத்துக்களை நிறைவேற்றுவதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதோ அரசுக்குப் பிடித்தமான காரியங்களாக இருக்கப் போவதில்லை.**

**கொழும்புத் துறைமுக நகரத்தை சீனாவே உருவாக்கித் தந்துள்ளது.**

**கொழும்புத் துறைமுகத்தை அண்டி கடல் பிரதேசத்தில் மண்ணைக் கொட்டி, ஒரு தீவுத் திடலை உருவாக்கி, அதில் தனி இராஜ்ஜியம் நடத்த எத்தனித்தது அந்நாடு. அதற்கு ஒத்துப் போனது கொழும்பு ஆட்சிப் பீடம்.**

**மேற்படி துறைமுக நகரத்தை இலங்கையின் சட்டத் தலையீடுகள் இல்லாமல், தனித்துவமான பிரதேசமாக சீனத் தரப்புக் கையாள்வதை உறுதிப்படுத்தவே இந்தச் சட்ட மூலம் என எதிரணிகள் குற்றம் சாட்டின.**

**இந்தச் சட்ட மூலம் வாயிலாக இலங்கையின் இறைமை பறிபோகப் போகின்றது என்றும், இலங்கை நாட்டை அண்டி, தனித்துவமான ஒரு பிரதேசத்தை சீனா தனது கட்டுப்பாட்டில் வைத்து கையாள்வதற்கு இந்தச் சட்டமூலம் வழி செய்யப் போகின்றது என்றும் எதிரணிகள் குமுறின.**

**உயர் நீதிமன்றத்திலும் இந்த வாதங்கள் வலுவாக எடுத்து வைக்கப்பட்டன.**

**இந்தக் கரிசனைகள் தொடர்பில் உயர் நீதிமன்றம் விசேட கவனிப்புச் செலுத்தியிருக்கின்றது என்பது அதன் தீர்ப்பில் – சட்டமூலம் தொடர்பான பரிந்துரைகளில் – புலப்படுகின்றது.**

**இப்போதைய அரசியல் நெருக்கடிகளில் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெறுவதே அரசுக்கு இக்கட்டு என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.**

**அதுவும், அரசுக்குள்ளேயே விஜேயதாஸ ராஜபக்ஷ போன்ற சிலரே கொழும்புத் துறைமுக அதிகார சபை சட்டமூலத்தை நாட்டின் இறைமைக்கு மாறானது எனப் பிரகடனப்படுத்தியிருக்கும் போது அரசுத் தரப்பின் முழு ஆதரவையும் இந்தச் சட்ட மூலத்துக்கு பெறுவதே கஷ்டமானதாக இருக்கும். அந்தப் பின்புலத்தில் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறுவதற்கு எதிரணியிலும் சில எம்.பிக்களை வளைத்துப் போடுவது என்பது இன்றைய நிலையில் மிகச் சிக்கலானதே.**

**அதுவும் இத்தகைய விடயங்களில் அரசின் சார்பில் குதிரைப் பேரங்களை நடத்தி, ஆள்களை – எம்.பிக்களை – வழிக்குக் கொண்டு வரும் அரசின் அரசியல் சாணக்கியர் பஸில் ராஜபக்ஷவும் நாட்டில் இல்லாத வேளை இது. அவர் அமெரிக்காவில்.**

**இந்தப் பின்புலத்தில் நாடாளுமன்றத்தில் உரிய எண்ணிக்கையை – மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை – அரசு எப்படி ஈட்டப்போகின்றது என்பதே கேள்வி.**

**இந்தப் பின்புலத்தில் இன்று மாலை 6 மணிக்கு விசேட அமைச்சரவை இந்த விடயம் குறித்து ஆராய்வதற்காகக் கூடுகின்றது.**

**அதன் பின்னர்தான் இந்தச் சட்டமூலம் தொடர்பில் அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது என்பது தெளிவாகும்.**

**எது, எப்படி என்றாலும், உயர் நீதிமன்றம் காத்திரமான பரிந்துரை ஒன்றை முன்வைத்திருக்கின்றது என்பது மட்டும் நிஜம்.**

## இஸ்ரேல் - பலஸ்தீன மோதல்; அக்கறை கொண்டுள்ள பிரதமர்



இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையிலான தற்போதைய மோதல்கள் காரணமாக அப்பிராந்தியத்தில் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ள மக்கள் தொடர்பாக மிகுந்த அக்கறை கொண்டுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தொடர்பில் தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையில், இந்த மோதல் நிலை காரணமாக சிறு குழந்தைகள் உயிரிழந்துள்ளமையுடன், அங்குள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மோதல் நிலைமை அண்டைய பிராந்தியங்களுக்கும் பரவும் அபாயம் காணப்படுவதால் முழு உலகுக்கும் பேரழிவு தரக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படக்கூடும்.

இன்று பலஸ்தீன மக்கள் எதிர்கொள்ளும் இந்த நெருக்கடி காலனித்துவத்தின் விளைவாகும். இந்த பிராந்திய மக்கள் இறையாண்மையை இழந்த காரணத்தால் மோதல் சூழ்நிலைகளுக்காக விதைக்கப்பட்டதை இன்று நாம் அனுபவித்து வருகிறோம்.

பாலஸ்தீனத்தின் நீண்டகால ஆதரவாளர் என்ற வகையிலும் பலஸ்தீன ஒத்துழைப்புக் குழுவின் இலங்கைக்கான ஸ்தாபகத் தலைவர் என்ற ரீதியிலும் பலஸ்தீனிய மக்களுக்கு ஒரு நியாயமான அரசுக்கான உரிமை உறுதி செய்யப்பட வேண்டும் என்பது எனது நிலைப்பாடாகும்.

விதிவிலக்கான மக்கள் என்ற வகையில் அவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு அம்மக்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மிக முக்கியமான பணியாகும்.

பலஸ்தீன பிரச்சினைக்கு நீண்டகால தீர்வு காண்பதற்கு பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் மக்களுக்கு மிகவும் முக்கியமான பாதுகாப்பு தேவைகள் மற்றும் நியாயத்தன்மையைப் பற்றி நன்கு புரிந்துகொள்வது அத்தியாவசியமானதாகும்.

இது போன்ற சூழ்நிலையில் நிம்மதியாக வாழ்வதற்கு பாதுகாப்பான மற்றும் பரஸ்பர ஏற்றுக்கொள்ளலை இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன மக்களால் பேச்சுகள் மூலம் அது நிரந்தரமாக தீர்க்கப்பட வேண்டும் என்பது இலங்கையின் நிலைப்பாடாகும்.

அத்தகைய பதற்ற சூழ்நிலையில் வெளிப்படும் உண்மை என்னவென்றால், இரு தரப்பினரும் முறையான அபிலாஷைகளை நோக்கி செயற்பட்டு நிலையான அமைதியை அடைய முடியும்.

இஸ்ரேல் - பலஸ்தீன பிராந்தியங்களுக்குச் சொந்தமான பூமி உலகெங்கிலும் உள்ள பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு புனிதமான இடமாகும் என்பது எனது உண்மையான நம்பிக்கையாகும்.

இதனால் ஏற்பட்ட பதற்ற நிலைமைக்கு மத்தியில் மிகுந்த நிதானத்துடன் செயற்பட்டு விரோதப் போக்கை அதிகரிப்பதற்குப் பதிலாக போர் நிறுத்தத்துக்கான பேச்சுக்கு செல்லுமாறு இரு தரப்பினரிடையேயும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

## வெள்ளம் பாதிக்கப்பட்டவர்களிடையே கொரோனா பரவுவது மிகக் குறைவே

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களிடையே கொரோனா வைரஸ் பரவுவது மிகக் குறைவு என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

ஏனெனில் தற்காலிக தங்குமிடங்களில் இருந்தவர்கள் தங்கள் வீடுகளுக்கு திருப்பி அனுப்பப்படுகிறார்கள் என அந்த நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ள அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் செய்தித் தொடர்பாளர் பிரதீப் கொடிபிலி –

இந்த திடீர் வெள்ளத்தால் இடம்பெயர்ந்தவர்களில் ஒரு கொரோனா நோயாளிகூட அடையாளம் காணப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

48 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் ஒரு லட்சத்து 21 ஆயிரத்து 177 பேர் மே 16 வரை தற்காலிக தங்குமிடங்களில் இருந்தனர் என்றும் ஆனால் அவர்களில் பெரும்பாலானோர் நேற்றைய நிலைவரப்படி அவர்களின் வீடுகளுக்கு திருப்பி அனுப்பப்பட் டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்ட தரவுகளின்படி மூன்று வீடுகள் மட்டுமே அழிக்கப்பட்டுள்ளன என்றும் 868 வீடுகள் ஓரளவு சேதமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், அனைத்து முக்கிய நதிகளின் நீர்மட்டமும் குறைந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## மனித உரிமைக்கு மதிப்பளிக்காத போக்குக்கு அரசு கோவிட்டை சாதகமாக பயன்படுத்துகிறது

### வலி. கிழக்கு தவிசாளர் காட்டம்



கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தலை மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்காத போக்கிற்கு சாதகமாக அரசாங்கம் பயன்படுத்துகின்றது என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தியாகராஜா நிரோஷ் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கு வழமைபோன்று இம்முறையும் இராணுவம் மற்றும் அரசாங்கத்தால் நெருக்கடி, அச்சுறுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும் தற்போது அச்சுறுத்தலாகக் காணப்படுகின்ற கொரோனா வைரஸ் தொற்றைக் கூட தனது மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்காத போக்கிற்கு சாதகமாக அரசாங்கம் பயன்படுத்துகின்றது.

இதனைப் பொலிஸார் தொடுக்கும் வழக்குகள் ஊடாக புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றன. யுத்த தர்மங்களுக்கும் மனிதாபிமானச் சட்டங்களுக்கும் புறம்பாகவே திட்டமிட்டு, எமது மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள். இவர்களை நினைவு கூருவதற்கு எங்களுக்கு சகல உரிமைகளும் இருக்கின்றன.

இதேவேளை படுகொலைகள் இடம்பெற்று தசாப்தங்கள் கடந்துள்ள போதும் இலங்கை அரசு பொறுப்புக் கூறவில்லை. மாறாக நினைவேந்தல் உரிமையைக் கூட கேள்விக்கு உட்படுத்துவதிலேயே அதிக கரிசனை கொள்கின்றது. – என அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





### தண்ணீரில் கலந்து குடிக்கும் 2-டிஜி கொரோனா தடுப்பு மருந்து

## உத்தியோகபூர்வமாக நேற்று அறிமுகம் செய்யப்பட்டது

ஒக்சிஜனை நம்பியிருக்கும் கொரோனா நோயாளிகளுக்கு நல்ல பலனைத் தரக்கூடிய, 2-டிஜி எனும் புதியதடுப்புமருந்துஅறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதை குளுக்கோஸ் போன்று தண்ணீரில் கலந்து குடிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மருந்து, மருத்துவப் பரிசோதனைகளின்போது கொரோனா நோயாளிகளுக்கு நல்ல பலன் அளிப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக ஒக்சிஜனை நம்பி இருக்கும் நோயாளிகளுக்குஇந்த மருந்து வழங்கப்பட்டதும் அவர்கள் பாதிப்பிலிருந்து விரைவில் மீண்டுள்ளனர்.

இதையடுத்து, 2-டிஜி மருந்தை அவசரகாலத்துக்குப் பயன்படுத்திக்கொள்ள இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு ஆணையம் கடந்த முதலாம் திகதி அனுமதி அளித்தது.

மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்வர்தன் ஆகியோர் முறைப்படி 2-டிஜி மருந்தை நேற்று அறிமுகம் செய்தனர். அறிமுக விழாவில் பேசிய ராஜ்நாத்சிங், “இந்த மருந்து கொரோனா நோயாளிகள் மத்தியில் புதிய நம்பிக்கையைக் கொண்டு வந்துள்ளது. கொரோனாவுக்கு எதிரான போரில் இது ஒரு முக்கிய மைல்கல்.

நாட்டின் அறிவியல் வளர்ச்சியையும் சக்தியையும் வெளிப்படுத்தும் மிகப்பெரிய உதாரணம் இந்த மருந்துதான்” என்று தெரிவித்தார்.

மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்வர்தன் பேசுகையில், “இந்தியாவுக்கு மட்டுமல்ல உலகத்துக்கே இந்த 2-டிஜி தடுப்பு மருந்து உதவப்போகிறது'' என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# ‘கரிசல் இலக்கியத்தின் தந்தை’ எழுத்தாளர் கி.ரா. காலமானார்

‘கரிசல் இலக்கியத்தின் தந்தை’ எனப் போற்றப்படும் எழுத்தாளர் கி.ராஜநாராயணன் என்கிற கி.ரா. 99 ஆவது வயதில் நேற்று புதுச்சேரியில் காலமானார்.


பல சிறுகதைகள், குறுநாவல்கள், கட்டுரைகள், நாவல்களை எழுதியுள்ள இவருக்கு ‘கோபல்லபுரத்து மக்கள்’ நாவலுக்காக சாகித்திய அகாடமி விருது வழங்கப்பட்டது.

இவரின் பல படைப்புகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இலக்கியச் சிந்தனை விருது, தமிழக அரசு விருது, கனடா இலக்கியத் தோட்டம் வழங்கிய தமிழ் இலக்கியச் சாதனை விருது உட்பட பல்வேறு விருதுகளை இவர் பெற்றுள்ளார்

‘கரிசல் இலக்கியத்தின் தந்தை’ என்றழைக்கப்படுகின்ற கி.ராஜநாராயணன் பிறந்ததும் அதே கரிசல் மண்ணில்தான். தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியை அடுத்த இடைச்செவல் கிராமத்தில் 1922ஆம் ஆண்டு பிறந்தார். அவரது இயற்பெயர் ராயங்கல ஸ்ரீ கிருஷ்ணராஜ நாராயண பெருமாள் ராமானுஜம். ஏழாம் வகுப்பு வரை படித்துவிட்டு விவசாயம் பார்த்து வந்த கி.ரா. பின்னர் எழுத்தாளராக மாறினார். அவர் எழுதிய ‘மாயமான்’ என்ற சிறுகதை 1958ஆம் ஆண்டு வெளியாகி பெரும் வரவேற்பைப் பெற்றது. குறுநாவல், நாவல், சிறுகதை, கிராமியக்கதை, கடிதம் என இலக்கியத்தின் பலதளங்களில் இயங்கியவர்.

‘கரிசல் கதைகள்’, ‘கொத்தைப்பருத்தி’, ‘கோபல்ல கிராமம்’ போன்றவை கி.ரா.வின் முக்கிய படைப்புகளாகும். ‘கோபல்லபுரத்து மக்கள்’ நாவலுக்காக 1991ஆம் ஆண்டு சாகித்திய அகாடமி விருது பெற்றவர். உ.வே.சா. விருது, இலக்கியவிவி சிந்தனை விருது, தமிழக அரசு விருது, தமிழ் இலக்கியச் சாதனை விருது உள்ளிட்டவற்றையும் பெற்றுள்ளார். புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் சிறப்பு பேராசிரியராகவும் பணிபுரிந்துள்ளார். ‘வட்டார இலக்கியத்தின் முன்னத்தி ஏர்’, ‘தமிழ் எழுத்துலகின் பீஷ்மர்’ எனப்போற்றப்பட்ட கி.ரா. தள்ளாத வயதிலும் தளராமல் எழுதிவந்தவர்.

‘ஒரே மூச்சில் ஒரு கதையை எழுதி முடிக்கும் வழக்கம் எனக்கில்லை, எழுதியதைப் படித்து அதை மீண்டும் மீண்டும் அடித்துத் திருத்தி எழுதுவேன்’ என்று தனது எழுத்து அனுபவத்தை இவர் பகிர்ந்திருக்கிறார். முன்பெல்லாம் நண்பர்களுக்கு நீண்ட கடிதம் எழுதும் வழக்கம் கொண்ட கி.ரா. அவர்களது



பதில் கடிதங்களைப் பாதுகாத்து வைப்பாராம். ஆனால் தற்போது கடிதத்துக்கான தேவை இல்லாமல்போய்விட்டது என்று ஆதங்கப்பட்டிருக்கிறார்.

கி.ராவின் ‘கிடை’ என்ற குறுநாவல் திரைப்படமாக எடுக்கப்பட்டுள்ளது. இவை தவிர அவரது எழுத்துக்களில் பல அனுமதியின்றியே வெள்ளத்திரையில் வெளிவந்திருக்கின்றன. ஆனால், அதைப் பற்றியெல்லாம் கி.ரா. கவலைப்பட்டதே இல்லை. ‘இல்லேன்னுதானே என்கிட்ட இருந்து எடுக்குறாங்க, எடுத்துக்கட்டும் விடுங்கன்னு’ விட்டுக்கொடுக்கும் எழுத்துலக அட்சயபாத்திரமாக அவர் திகழ்ந்திருக்கிறார். நல்ல இசை ஞானம் கொண்ட கி.ரா. வய லின் இசைக்கக் கற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கொரோனாவால் வீடுகளுக்குள் முடங்கிப் பலர் தனிமையில் வாட, எழுதப்படிக்கத் தெரிந்தவருக்கெல்லாம் தனிமையே தெரியாது. இசை தெரிஞ்சவருக்கு ஏதய்யா தனிமை? எனக் கேள்வியெழுப்பியிருந்தார். கொரோனா காலத்தில் ‘அண்டரெண்டப் பட்சி’ என்ற நூலைக் கையெழுத்துப் பிரதியாகவே வெளியிட்டிருந்தார்.

தனது படைப்புகளுக்கான உரிமையை தனது இரு மகன்களோடு, தன்னைக் கவனித்து வந்த வாசகரும் எழுத்தாளருமான ஒருவருக்கும் சேர்த்து எழுதி வைத்தவர் இவர்.

இவருக்கு இலங்கை மற் றும் புலம் பெயர் தேசங்களிலுள்ள தமிழர்கள் மத்தியிலும் பெரும் மரியாதை உள்ளது. கி.ரா. என்னும் கரிசல் காட்டுப்பூ உதிர்ந்துவிட்டாலும் அவரது எழுத்துகள் என் றென்றும் மணம் வீசிக் கொண்டே இருக்கும் எனப் பலரும் சமூக வலைத் தளங்களில் தமது அஞ்சலி களைப் பதிவிட்டுவருகின்றனர்.

## கொரோனாவின் உண்மை நிலை பற்றிப் பேசினால் ‘தேசத்துரோகி’யாக வேண்டியிருக்கும்; பா.ஜ.க. எம்.எல்.ஏ

கொரோனாப் பாதிப்பின் உண்மை நிலைபற்றிப் பேசினால் என்னையும் தேசத் துரோகி என்பார்கள் என உத்தரப் பிரதேச பா.ஜ.கட்சி எம்.எல்.ஏ. ராகேஷ் ரத்தோர் தெரிவித்துள்ளார்.

கொரோனா நிலைமையை உத்தரப் பிரதேச மாநில அரசு கையாள்வது குறித்து ஆளும் கட்சியின் சில தலைவர்களே கேள்விகளை எழுப்பி வருகின்றனர். இந்தச் சூழலில் உத்தரப் பிரதேச மாநிலம் சீதாப்பூரைச் சேர்ந்த பா.ஜ.கட்சி எம்.எல்.ஏயான ராகேஷ் ரத்தோர், அதிகமாகப் பேசினால் ‘தேசத்துரோக’ குற்றச்சாட்டுகளை தான் சந்திக்க நேரிடும் என்று தெரிவித்திருக்கிறார். சீதாப்பூரில் ராகேஷ் ரத்தோரிடம் ஊடகவியலாளர்கள் கேட்டகேள்விகளுக்குப்பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



‘கொரோனா பாதிப்புகள் அதிகரித்து, அதிக படுக்கைகள் தேவைப்பட்டாலும், சீதாப்பூர் மாவட்டத்தில் ஒரு சிகிச்சை மையம்கூட ஏன் இன்னும் செயற்படவில்லை?’ என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர், எங்கள் நிலை எப்படி உள்ளது என்றால், நாங்கள் எம்.எல்.ஏக்கள். அதிகமாகப் பேசினால், நாங்களும் தேசத்துரோகக் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். நான் என் உணர்வுகளை முன்பு தெரிவித் துள்ளேன். ஆனால், நான் இனி பேசாதது நல்லது என தெரிவித்துள்ளார்.

‘பொது முடக்கம் ஏன் இறுக்கமாக அமுல்படுத்தப்படவில்லை?’ என்று கேட்ட போது, எல்லாம் சரியாக நடந்து கொண்டிருக்கிறது.

இதைவிட வேறு எதுவும் சிறப்பாக இருக்க முடியாது. நான் தனியான அரசாங்கம் அல்ல. ஆனால், அரசாங்கம் சொல்வதை சரியானது என்று மட்டுமே உங்களுக்கு என்னால் சொல்ல முடியும் என அவர் பதில் கூறியுள்ளார். கொரோனாவின் முதல் அலையின்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, தீபம் ஏற்றி, ஒலி எழுப்பச் சொன்னபோதும் அது குறித்து ராகேஷ் ரத்தோர் கேள்வி எழுப்பியிருந்தார். அவரது பகுதியில் உள்ள உணவு தானியங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் நிலைமை குறித்து கேட்டவரிடம் ‘ராம ராஜ்யம்’ ஏற்கனவே வந்துவிட்டது என கிண்டல் தொனியில் தொலைபேசியில் இவர் பதிலளித்திருந்ததும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கேரளாவில் பினராய் விஜயன் தலைமையில் அமைச்சரவை 20 ஆம் திகதி பதவியேற்கிறது

கேரளாவில் பினராய் விஜயன் தலைமையிலான அமைச்சரவை வரும் 20 ஆம் திகதி பதவியேற்கவுள்ளது.

முதலமைச்சர் பினராய் விஜயன் உட்பட 21 பேர் அமைச்சர் பொறுப்புகளை ஏற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. கேரளாவில் கடந்த மாதம் நடந்த சட்டப்பேரவை தேர்தலில் ஆளும் இடதுசாரிக் கூட்டணி அமோக வெற்றி பெற்றது.



மொத்தமுள்ள 140 இடங்களில் இந்தக் கூட்டணி 99 தொகுதிகளில் வெற்றிபெற்று ஆட்சியைத் தக்க வைத்தது. கேரள அரசியல் வரலாற்றில் ஒரு கூட்டணியும், ஒரு முதல்வரும் தொடர்ந்து இரண்டாவது தடவை ஆட்சியில் அமர்வது இதுதான் முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு இரண்டு வாரங்களுக்கு மேலான பின்னரும் இதுவரை புதிய அரசு பதவி ஏற்கவில்லை.

கடந்த சில தினங்களாகக் கூட்டணிக் கட்சிகளுக் கிடையே அமைச்சர்களைத் தேர்வு செய்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டங்கள் நடந்தன.

நேற்று திருவனந்தபுரத்தில் நடைபெற்ற இடதுசாரி கூட்டணி கட்சிகளின் ஆலோசனைக்கூட்டத்தில் இறுதி முடிவுகள் எடுக்கப்பட்டன எனவும் முதல்வர் உட்பட அமைச்சரவையில் 21 பேருக்கு வாய்ப்பு வழங்க முடிவு செய்யப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

வரும் 20 ஆம் திகதி திருவனந்தபுரம் மத்திய அரங்கத்தில் பதவியேற்பு விழாவை நடத்துவது என்றும் பதவியேற்பு விழாவுக்கு அதிகபட்சமாக 250 பேருக்கு மட்டுமே அழைப்பு விடுக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது. பதவியேற்பு விழாவுக்கு வரும் அனைவருக்கும் கொரோனா பரிசோதனை கட்டாயமாக்கப்பட்டுள்ளதென்றும், இதற்காக பதவியேற்பு விழா நடைபெறும் இடத்தில் அன்டிஜன் பரிசோதனைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.




'மியன்மாருக்காகப் பேசுங்கள்'

## அழகி போட்டியில் ஆதரவை கேட்ட மியன்மார் அழகி

69ஆவது பிரபஞ்ச அழகி போட்டி அமெரிக்காவின் புளோரிடா மாகாணம் ஹாலிவுட் நகரில் உள்ள ராக் ஹோட்டல் அண்ட் கேசினோவில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு நடந்தது. இதில் மியன்மார் நாட்டின் சார்பில் துசர் விண்ட் லவின் என்கிற அழகி பங்கேற்றார். இவர் இறுதி சுற்றுக்கு தகுதி பெறாத போதும் சிறந்த தேசிய ஆடைக் கான விருதை வென்றார்.

அவர் மியன்மாரின் பாரம்பரிய உடையில் மேடையில் அழகு நடை போட்டு வந்த போது "மியன்மாருக்காக பிரார்த்தியுங்கள்" என்கிற பதாகையை கையில் ஏந்தி வந்தார். அதன் பின்னர் அவர் பேசியபோது "எங்கள் மக்கள் ஒவ்வொரு நாளும் இறந்து கொண்டிருக்கிறார்கள். இராணுவத்தால் சுடப்படுகிறார்கள். மியன்மாரை பற்றி பேச அனைவரையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பிரபஞ்ச அழகியின் மியன்மார் போட்டியாளர் என்கிற முறையில் ஆட்சி கவிழ்ப்பு முதல் என்னால் முடிந்த வரை நான் பேசிக்கொண்டு இருக்கிறேன். எல்லோரும் மியன்மாருக்காக பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என கூறினார். மியன்மாரில் கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை கவிழ்த்து விட்டு இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியமையும், இராணுவ ஆட்சிக்கு எதிராக போராடி வரும் மக்களை இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தி கொல்லுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவர் வெளிநாடு செல்லத் தடை விதிப்பு

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் சகோதரர் பொஸ் ஷெரீப் (வயது 69). இவர்தான் தற்போது நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சியின் தலைவராகவும், நாடாளுமன்ற எதிர்க் கட்சித் தலைவராகவும் உள்ளார். ஊழல் வழக்கு ஒன்றில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட இவர் கடந்த மாதம் பிணையில் வெளியே வந்தார். இதையடுத்து, அவர் மருத்துவ சிகிச்சைக்காக ஒரு முறை மட்டும் வெளிநாடு செல்வதற்கு லாகூர் உயர் நீதிமன்றம் கடந்த வாரம் அனுமதி அளித்தது.

ஆனால் அவர் கட்டார் வழியாக லண்டன் செல்வதற்காக லாகூர் விமான நிலையத்துக்கு சென்றபோது, மத்திய புலனாய்வு படையினர் அவரை விமானத்தில் ஏற விடாமல் தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்பினர். இந்த நிலையில் பிரதமர் இம்ரான் கான் தலைமையிலான அரசு வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டோரின் பட்டியலில் பொஸ் ஷெரீப்பின் பெயரை சேர்த்துள்ளது.

# 6 வாரத்தில் 8 கோடி தடுப்பூசிகளை உலக நாடுகளுக்கு அனுப்புவோம்

## அமெரிக்க அதிபர் பைடன் உறுதி



சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகம் முழுவதும் 200 நாடுகளுக்கும் மேல் பரவியுள்ளது. கொரோனா வைரஸ் தாக்குதலின் வீரியம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

அமெரிக்காவில் கொரோனாவால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 3.37 கோடியைக் கடந்துள்ளது.அங்கு கொரோனாவுக்கு பலியானோர் எண்ணிக்கை 6 லட்சத்தைத் தாண்டியது. கொரோனாவில் இருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 2.72 கோடியைத் தாண்டியுள்ளது.

எனவே அங்கு தடுப்பூசி போடும் பணிகளுக்கு அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து முழுவீச்சில் போட்டு வருகிறது. இதற்கிடையே, அமெரிக்காவில் முழுமையாக தடுப்பூசி போட்டுக்கொண்டவர்கள் முகக் கவசம் அணிய தேவையில்லை என அந்நாட்டு நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம் அறிவித்தது.

சி.டி.சியின் இந்தப் பரிந்துரையை அரசும் செயல்படுத்தி உள்ளது. அதன்படி அதிபர் ஜோ பைடன் மற்றும் துணை அதிபர் கமலா ஹரிஸ் ஆகியோர் சமீபத்தில் முகக் கவசம் இல்லாமலேயே செய்தியாளர்களைச் சந்தித்தனர். இதனால் அமெரிக்காவில் விரைவில் இயல்பு நிலை திரும்ப உள்ளதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், பல்வேறு நாடுகளின் கோரிக்கைகளை ஏற்று அடுத்த 6 வாரங்களில் உலக நாடு களுக்கு 8 கோடி தடுப்பூசிகளை வழங்க உள்ளோம் என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

# காசா நகர் மீது போர் விமானங்கள் குண்டு மழை தாக்குதலை தீவிரப்படுத்தியது இஸ்ரேல் இராணுவம்



காசா நகர் மீதான தாக்குதலை இஸ்ரேல் இராணுவம் தீவிரப்படுத்தியதை தொடர்ந்து அங்கு போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்தன.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் இடையே நீண்ட காலமாக எல்லைப்பிரச்சினை நீடித்து வரும் நிலையில் கடந்த 10ஆம் திகதி பலஸ்தீனத்தின் காசா நகரைச் சேர்ந்த ஹமாஸ் போராளிகளுக்கும் இஸ்ரேல் இராணுவத்துக்கும் இடையே பயங்கர மோதல் வெடித்தது.

அப்போது தொடங்கி தற்போது வரை இரு தரப்பும் கடுமையாக சண்டையிட்டு வருகின்றன. காசா நகரில் இருந்து ஹமாஸ் போராளிகள் இஸ்ரேல் நகரங்கள் மீது ரொக்கெட்டுகளை வீசி தாக்குதல் நடத்தி வருகின்றனர். அதற்கு பதிலடி தரும் விதமாக இஸ்ரேல் போர் விமானங்கள் காசா நகர் மீது வான் தாக்குதல் நடத்தி வருகிறது.

இருதரப்பும் மோதலை கைவிட வேண்டும் என சர்வதேச சமூகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஆனால் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நாட்டு மக்களிடம் உரையாற்றிய இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன் யாஹு ஹமாஸ் குழுவுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை முழு வலிமையுடன் தொடரும் என கூறுரைத்தார். அதன்படி மோதல் தொடங்கியதில் இருந்து இதுவரை இல்லாத வகையில் நேற்று முன்தினம் காசா நகர் மீது இஸ்ரேல் இராணுவம் மிகவும் கடுமையான வான் தாக்குதல்களை நடத்தியது.

இஸ்ரேலின் 50 போர் விமானங்கள் சுமார் 20 நிமிடங்களுக்கு காசா நகர் மீது இடைவிடாது குண்டு மழை பொழிந்தன என தகவல்கள் தெரிவிக்கின்றன. திங் கட்கிழமை அதிகாலை தொடங்கி இரவு வரை இஸ்ரேல் இராணுவம் காசா நகர் மீது 80 முறை வான் தாக்குதல்களை நடத்தினஎன கூறப்படுகிறது.

ஹமாஸ் போராளிகள் குழுவின் நிலைகள் மற்றும் அந்த அமைப்பின் தலைவர்களின் வீடுகளை இலக்காக வைத்து இந்த வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் கூறுகிறது.

ஆனால் இஸ்ரேலின் வான் தாக்குதல்களில் காசா நகரில் முக்கியமான சாலைகள் மற்றும் மின் இணைப்புகள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டன என பலஸ்தீன அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதற்கிடையில் ஹமாஸ் போராளிகள் இஸ்ரேல் நகரங்கள் மீது கொத்துக் கொத்தாக ரொக்கெட்டுகளை வீசி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

ஹமாஸ் ஏவிய ரொக்கெட்டுகள் இஸ்ரேலின் ஆஷ்கேலோன், ஆஷ்தோத், நெடிவோட் ஆகிய நகரங்களையும், மத்திய மற்றும் தெற்கு இஸ்ரேலின் பிற பகுதிகளையும் சென்று தாக்கின. ஆனாலும் இப்பகுதிகளில் காயமடைந்தவர்கள் அல்லது உயிரிழப்புகள் குறித்த செய்தி எதுவும் வெளியாகவில்லை.

கடந்த ஒரு வார காலத்தில் காசா பகுதியில் இருந்து பலஸ்தீன ஆயுதக் குழுவினர் தங்கள் பகுதியை நோக்கி 3,000இற்கும் அதிகமான ரொக்கெட்டுகளை ஏவித் தாக்கியுள்ளனர் என்று இஸ்ரேல் இராணுவம் கூறுகிறது.

எனினும் நடுவானில் ரொக்கெட்டுகளை இடைமறித்து அழிக்கும் இஸ்ரேலின் அயர்ன் டோம் பாதுகாப்பு அமைப்பு பெரும்பாலான ரொக்கெட்டுகளை தடுத்து அழித்துவிட்டது. எனினும் சில வாகனங்கள் மற்றும் கட்டிடங்கள் ஹமாஸ் ரொக்கெட்டுகளால் சேதமடைந்துள்ளன.

இதனிடையே நேற்று திங்கட்கிழமை முதல் நடந்து வரும் இருதரப்பு மோதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 208 ஆக உயர்ந்துள்ளது.

இஸ்ரேலின் வான் தாக்குதல்களில் காசா நகரில் இதுவரை 198 பேர் உயிரிழந்துள்ளனர் என பலஸ்தீன அதிகாரிகள் கூறுகின்றனர். இவர்களில் 58 பேர் சிறுவர்கள் ஆவர். அதேபோல் ஹமாஸ் போராளிகளின் ரொக்கெட் தாக்குதலில் தங்கள் தரப்பில் இதுவரை 5 வயது குழந்தை உட்பட 10 பேர் உயிரிழந்துள்ளனர் என இஸ்ரேல் கூறுகிறது.

# கொரோனா பாதிப்பு அதிகரிப்பால் வெளிநாட்டினர் தாய்வான் வர தடை

கிழக்கு ஆசியாவில் அமைந்துள்ள தீவு நாடான தாய்வான் கொரோனா வைரஸ் பரவலை வெற்றிகரமாக கட்டுக்குள் கொண்டுவந்த நாடுகளில் ஒன்றாக இருந்து வந்தது. ஆனால் கடந்த சில நாள்களாக தாய்வானில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவல் வேகமெடுக்க தொடங்கியுள்ளது.

அங்கு கடந்த சனிக்கிழமை முதல் முறையாக தினசரி கொரோனா பாதிப்பு 100இற்கும் அதிகமாக பதிவானது. இந்த நிலையில் அங்கு இதுவரை இல்லாத வகையில் நேற்று ஒரே நாளில் 333 பேருக்கு புதிதாக கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதன் மூலம் அங்கு கொரோனா மொத்த பாதிப்பு 2,017 ஆக அதிகரித்துள்ளது. அங்கு இதுவரை கொரோனாவுக்கு 12 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில் கொரோனா பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதால் வெளிநாட்டினர் தாய்வான் வருவதற்கு ஒரு மாதம் தடைவிதித்து அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது. இது குறித்து தாய்வான் நோய் கட்டுப்பாட்டு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:



உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் அதிகரித்து வரும் கொரோனாத் தொற்று நோய் நிலைமை காரணமாக, உள்நாட்டு தொற்று நோயியல் நிலைமை மற்றும் நமது குடிமக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க மே 19 முதல் பின்வரும் எல்லை கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்படுகிறது. அதன்படி அவசர மற்றும் மனிதாபி மான வழக்குகளுக்கான விதிவிலக்குகளுடன் வெளிநாட்டினர் தாய்வானுக்குள் நுழைவதற்கு தடை விதிக்கப்படுகிறது. தாய்வான் வழியாக பயணிகள் விமான போக்குவரத்து நிறுத்தப்படும். இந்த தடைகள் ஜுன் மாதம் 18 ஆம் திகதி வரை தொடரும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# வழமைக்கு திரும்பியது அம்பாறை மாவட்டம்

(ஏ.எல்.எம்.ஷினாஸ் )

கொரோனாத் தொற்று நோயை கட்டுப்படுத்தும் நோக்கில் கடந்த வியாழக்கிழமை 13 ஆம் திகதி இரவு 11 மணிக்கு அமுல்படுத் தப்பட்டிருந்த பயணத்தடை நேற்று திங்கட்கிழமை அதிகாலை 4 மணிக்கு தளர்த்தப்பட்டது. இதனையடுத்து அம்பாறை மாவட்டத்தின் இயல்பு நிலை வழமைக்கு திரும்பியது.



பொதுமக்கள் அரசாங்கத்தின் அறிவுறுத்தல்களை பின்பற்றி சுகாதார சட்டவிதிமுறைகளுக்கு அமைய தமது அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

மூன்று நாள்களாக மூடப்பட்டிருந்த வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகளும் நடைபெற்றன. உள்ளூர் மரக்கறி வகைகள் சந்தையில் குறைந்த விலையில் விற்கப்பட்ட போதிலும் மலைநாட்டு மரக்கறி வகைகள் கூடிய விலையில் விற்கப்பட்டன என பொதுமக்கள் தெரிவித்தனர்.

பொதுப் போக்குவரத்து சேவைகளும் சுமுகமாக நடைபெற்றதை காணக்கூடியதாக இருந்தது. பயணிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சுகாதார சட்ட விதிமுறைகளுக்கமைய பயணம் செய்தனர். பொதுச்சுகாதாரத் பரிசோதகர்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஒன்றிணைந்து விசேட கண்காணிப்பு சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர். அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த போக்குவரத்து மற்றும் ஒன்று கூடல்களை பொதுமக்கள் தவிர்த்துக் கொள்வதுடன் சுகாதார விதிமுறைகளை மீறுவோர் மீது நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்ற அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

# பயணத் தடைக்குப் பின் கிழக்கு வழமை நிலை

கடந்த மூன்று தின முடக்கலையடுத்து நேற்று திங்கட்கிழமை கிழக்கு மாகாணம் வழமைக்குத் திரும்பியுள்ளது.

கடைகள் திறக்கப்பட்டு வாகனங்கள் வீதியில் தாராளமாகப் பயணித்தன. அரச அலுவலகங்கள் சட்டதிட்டத்திற்கமைவாக குறைந்தளவு அலுவலர்களுடன் இயங்கின.

அடையாளஅட்டையுடன் அத்தியாவசிய தேவைகளுக்காக மட்டும் பொதுமக்கள் வெளியேறலாமென அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும் பெரும்பாலானோர் வீதிகளில் நடமாடியதைக் காணமுடிந்தது. சில இடங்களில் படையின் பொலிஸார் அடையாள அட்டையை பரீசீலித்த இதேவேளை சம்மாந்துறையில் சுகாதாரத் துறையினரின் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# சிவப்பு வலயமாக மட்டக்களப்பு அறிவிப்பு

கொரோனா அச்சுறுத்தல் அதிகரித்துள்ளமை காரணமாக மட்டக்களப்பு மாவட்டம் சிவப்பு வலயமாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக அம்மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் 3 கிராம சேவையாளர் பிரிவுகள் உடன் அமுலுக்கு வரும் வகையில், இன்று முதல் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்று (செவ்வாய்க்கிழமை) காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே நாகலிங்கம் மயூரன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, மட்டக்களப்பில் கடந்த 24மணி நேரத்தில், 66 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையுடன் இரண்டு மரணங்களும் இடம்பெற்றுள்ளன.

அதாவது, மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை காரணமாக 3 கிராம சேவையாளர் பிரிவுகள் இன்று முதல் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

அதாவது, கல்லடி வேலூர், சின்ன ஊறணி, திருச்செந்தூர் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளே இவ்வாறு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையிர் மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகள், சிவப்பு வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆகவே மக்கள் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வாழைச்சேனை 32 அரச உத்தியோகத்தர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை

வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 32 அரச உத்தியோகத்தர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் நேற்று திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்டுள்ளன என வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி டி.எஸ்.சஞ்ஜீவ் தெரிவித்தார்.

நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வைரஸ் தாக்கம் அதிகரித்த நிலையில் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தொடர்ச்சியாக பி.சி.ஆர். பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன.

வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், வாழைச்சேனை பொலிஸார், கல்குடா வலய கல்வி அலுவலகத்தில்கடமையாற்றும்உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் இடம்பெற்றன. இதில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஆர்.நிதிராஜ், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கலந்து கொண்டனர்.

நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கத்தின் மூன்றாவது அலை பரவியுள்ள நிலையிலும் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவிலும் அதிகரித்து காணப்படும் நிலையில் பொதுமக்கள் விழிப்புடன் இருந்து பிரதேசத்தினை பாதுகாத்துக் கொள்ளுமாறு சுகாதார வைத்திய அதிகாரி டி.எஸ்.சஞ்ஜீவ் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் மக்களுக்கு விடுத்துள்ள எச்சரிக்கை

மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குள் தொடர்ந்து அதிகரித்து வரும் கொரோனா தொற்று காரணமாக ஐந்து கிராம சேவகர் பிரிவுகளை முற்றாக முடக்குவதற்கு மட்டக்களப்பு மாவட்ட கொரோனா தடுப்பு செயலணி கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய பாலமீன்மடு, சின்ன ஊரணி, கல்லடி வேலூர், பூநொச்சிமுனை, திருச்செந்தூர் ஆகிய ஐந்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் இவ்வாறு முடக்கப்படவுள்ளன.

குறித்த கிராம சேவகர் பிரிவுகள் முடக்கப்படும் நிலையில் மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குள் உள்ள அத்தியாவசிய சேவைகளை வழங்குகின்ற வியாபார நிலையங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வியாபார நிலையங்களும் மூடப்பட வேண்டும் என மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்கமைய, பழக்கடைகள், மருந்தகங்கள், வெதுப்பகங்கள், உணவகங்கள் தவிர்ந்த அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடுமாறும், திறக்கப்படும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மாநகர முதல்வர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், திறக்க அனுமதி வழங்கப்பட்ட வர்த்தக நிலையங்களில் கொரோனா தடுப்பு செயலணியாலும் சுகாதார துறையினராலும் முன்வைக்கப்படும் சட்டதிட்டங்களை பின்பற்றி வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவ்வாறு செயற்பாடாத வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் குறித்த வர்த்தக நிலையங்களை மூட வேண்டி வரும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். மேலும் கருத்து தெரிவித்த அவர், பொதுமக்கள் போதிய ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்க வேண்டும் என்றும் தேவையில்லாது வெளியில் நடமாடுவதை தவிர்க்க வேண்டும் என்றும், முகக்கவசங்களை அணியுமாறும், கூட்டமாக செயற்படுவதை தவிர்க்குமாறும் பொதுமக்களுக்குவேண்டுகோள் விடுத் துள்ளார்.

# முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஜனநாயக இடதுசாரி முன்னணியுடன் இணைவு

(எப்.முபாரக்)

கிழக்குமாகாண முன்னாள் முதலமைச்சர் நஜீப் ஏ மஜீட் ஜனநாயக இடதுசாரி முன்னணியில் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் ரியாஸ்தீன் தலைமையில் நேற்று உத்தியோக பூர்வமாக இணைந்து கொண்டார்.



இதன்போது ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவநாணயகார அவர்களிடம் கட்சி அங்கத்துவத்தை நஜீப் ஏ மஜீட் பெற்றுக் கொண்ட தோடு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் எதிர்கால அர சியல் செயற்பாடுகளை திருகோணமலை மாவட்டத் தில் எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பாகவும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் கட்சியின் பிரதிநிதித்துவங்களை அதிகரிப்பது தொடர்பிலும் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கந்துரையாடலில் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயகார, கட்சியின் கிழக்கு மாகாண இணைப்பாளர் மரைக்கார், முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீட், ஜனநாயக இடதுசாரி முன்னணியின் திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் ரியாஸ்தீன் ஆகியோருடன் கட்சியின் உயர்பீட உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.



# மகளிர் சாம்பியன்ஸ் லீக் கால்பந்துத் தொடர் பார்சிலோனா அணி சம்பியனானது

மகளிர் சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்டத் தொடரில் பார்சிலோனா அணி முதல் முறையாக கிண்ணத்தை வென்றுள்ளது.

சுவீடனில் நடந்த பரபரப்பான இறுதிப் போட்டியில் செல்சி அணியுடன் மோதிய பார்சிலோனா மகளிர் அணி, தொடக்கத்தில் இருந்தே முழுமையாக ஆதிக்கம் செலுத்தியது. போட்டி ஆரம்பித்த முதல் நிமிடத்திலேயே செல்சி அணியினர் தவறுதலாக அடித்த பந்து பார்சிலோனாவுக்கு கோலாக மாறியது. தொடர்ந்து புடெல்லஸ் 14 ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பில் கோல் அடித்தார்.

அடுத்தடுத்து பொன்மடி, ஹன்சென் இருவரும் கோல் அடிக்க, பார்சிலோனா அணி இடைவேளையின்போது 4 - 0 என முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியில் இரு அணிகளாலும் கோல் ஏதும் அடிக்கப்படவில்லை.

ஆட்ட நேர முடிவில், பார்சிலோனா அணி 4 - 0 என்ற கோல் கணக்கில் அபாரமாக வென்று மகளிர் சம்பியன்ஸ் லீக் தொடரில் முதல் முறையாக கோப்பையை வென்று சாதனை படைத்தது. இதன் மூலம் இந்தத் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற முதல் ஸ்பெயின் மகளிர் அணி, சம்பியன்ஸ் லீக் தொடரின் ஆண்கள் மற்றும் மகளிர் பிரிவுகளில் சம்பியன் பட்டம் வென்ற முதல் கழகம் ஆகிய பெருமைகளும் பார்சிலோனாவுக்குக் கிடைத்துள்ளது.

# நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து ஜோப்ரா ஆர்ச்சர் விலகினார்

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சர் விலகியுள்ளார்.

இந்தியாவுக்கான இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சுற்றுப் பயணத்தில் இடம்பெற்றிருந்த வேகப்பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சர், டெஸ்ட் மற்றும் ரி – 20 போட்டித் தொடர்களில் விளையாடினார். கைவிரல் மற்றும் வலது முழங்கையில் ஏற்பட்ட காயத்தின் பாதிப்பு அதிகரித்ததால் அவர் ஒருநாள் போட்டி தொடரில் இருந்து விலகி நாடு திரும்பினார். கைவிரல் காயத்துக்கு சத்திரசிகிச்சை செய்து கொண்ட அவர் ஐ.பி.எல். போட்டியில் இருந்தும் விலகியிருந்தார்.

இதற்கிடையில் காயத்தில் இருந்து தேறிய ஜோப்ரா ஆர்ச்சர் கவுண்டி கிரிக்கெட் போட்டியில் கடந்த வாரம் நடந்த கென்ட் அணிக்கு எதிரான ஆட்டத்தில் சசெக்ஸ்



அணிக்காக களம் இறங்கினார். இதில் முதல் இன்னிங்ஸில் 13 ஓவர்கள் வீசி 2 விக்கெட்டுக்களை வீழ்த்திய ஜோப்ரா ஆர்ச்சர் இரண்டாவது இன்னிங்சில் 5 ஓவர்கள் பந்து வீசிய நிலையில் கையில் வலி ஏற்பட்ட தால் தொடர்ந்து பந்து வீசவில்லை.

ஜோப்ரா ஆர்ச்சருக்கு முழங்கையில் மீண்டும் வலி ஏற்பட்டு இருப்பதை உறுதி செய்து இருக்கும் இங்கிலாந்து கிரிக்கெட் சபை, மருத்துவர்களோடு கலந்தாலோசித்த பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து முடிவு செய்யப்படும் என்று தெரிவித்துள்ளது. அவருக்கு முழங்கையில் சத்திரசிகிச்சை செய்ய வேண்டியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

எனவே, அடுத்த மாதம் இரண்டாம் திகதி ஆரம்பமாகவிருக்கும் நியூசிலாந்துக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரிலிருந்தும் ஜோப்ரா ஆர்ச்சர் விலகியிருக்கிறார்.

# இங்கிலாந்துடனான தொடரை பயிற்சிக் களமாகப் பார்க்கவில்லை

## நியூசிலாந்து வீரர் நீல் வக்னர்



இந்தியா – நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி ஜூன் 18ஆம் திகதி தொடங்குகிறது. அந்தப் போட்டியில் பங்கேற்கும் நியூசிலாந்து வீரர்கள் இங்கிலாந்து சென்று 'தனிமைப்படுத்தலில்' இருக்கின்றனர்.

அந்தப் போட்டிக்கு முன்பாக இங்கிலாந்துக்கு எதிராக 2 டெஸ்ட்கள் கொண்ட தொடரில் நியூசிலாந்து அணி விளையாடவுள்ளது. இங்கிலாந்து புறப்படுவதற்கு முன்பு நியூசிலாந்து வீரர் நீல் வக்னர் ஊடகமொன்றுக்குப் பேட்டியளிக்கையில், 'இங்கிலாந்துக்கு எதிரான 2 டெஸ்ட் போட்டிகளை உலக டெஸ்ட் இறுதிப்போட்டிக்கான பயிற்சி ஆட்டமாக நாங்கள் கருதவில்லை. அங்கு விளையாடுவதைப் பெருமையாகக் கருதுகிறோம். அத்தோடு, அந்தப் போட்டிகளில் வெல்லவும் விரும்புகிறோம்' என்று கூறியுள்ளார்.

# சூதாட்டப் புகார்களில் உண்மையில்லை இந்தியத் தொடர்கள் குறித்து ஐ.சி.சி. தகவல்

2016 ஆம் ஆண்டு சென்னையில் நடந்த இந்தியா – இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டி மற்றும் 2017 ஆம் ஆண்டு ராஞ்சியில் நடந்த இந்தியா – ஆஸ்திரேலியா அணிகள் விளையாடிய டெஸ்ட் போட்டிகளை ஆராய்ந்து பார்த்தால் அவற்றில் சூதாட்டம் நடந்திருப்பது தெளிவாகத் தெரிவதாக அல் ஜசீரா தொலைக்காட்சியில் கடந்த 2018 ஆம் ஆண்டில் ஒளிபரப்பான நிகழ்ச்சியொன்றில் தெரிவிக்கப்பட்டது.

இந்த சூதாட்டக் குற்றச்சாட்டுக் குறித்து சர்வதேச கிரிக்கெட் சபை விசாரணைகளை நடத்தி வந்தது. இதற்காக நான்கு சிறப்பு நிபுணர்களை நியமித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த விசாரணையின் முடிவில் இந்திய அணி மோதிய அந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் சூதாட்டம் நடந்ததற்கான எந்தவித முகாந்திரங்களோ நம்பத்தகுந்த ஆதாரங்களோ இல்லை என்பது தெரியவந்துள்ளதாகவும் இதனால் ஐ.சி.சி. ஊழல் தடுப்புப் பிரிவின் கீழ் இந்த வியத்தில் குற்றச்சாட்டு எதுவும் பதிவு செய்யப்பட வாய்ப்பில்லை என்றும் சர்வதேச கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

# மேற்கிந்திய தொடருக்கான ஆஸ்திரேலிய அணி அறிவிப்பு

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி ஜூலை 10 ஆம் திகதி முதல் மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 ரி – 20, மூன்று ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாட உள்ளது. அதற்காக அரோன் பிஞ்ச் தலைமையிலான 22 பேர் கொண்ட அணியை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை நேற்று அறிவித்தது.

இந்த ஆண்டு மார்ச் மாதம் நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் இடம் பெறாத கம்மின்ஸ், ஸ்மித், டேவிட் வோர்னர் உட்பட 7 பேர் மீண்டும் அணியில் இடம் பெற்றுள்ளனர். இப்போது இங்கிலாந்தில் உள்ள லபுஷேன் அணியில் சேர்க்கப்படவில்லை. கழகப் போட்டிகளில் விளையாடிவரும் அவர், பயணங்களை மேற்கொள்வதில் உள்ள கட்டுப்பாடுகள் காரணமாக இந்த அணியில் இணைக்கப்படவில்லை



அணி விபரம்: அரோன் பிஞ்ச் (குப்டன்), அஷ்டன் ஏகார், பெஹரண்டர்ப், அலெக்ஸ் கரி, கம்மின்ஸ், ஹசல்வுட், ஹென்ரிக்ஸ், மிட்செல் மார்ஷ், மக்ஸ்வெல், மெர்டித், ஜோஷ் பிலிப், கை ரிச்சர்ட்சன், கேன் ரிச்சர்ட்சன், தன்வீர் சங்கா, டிஆர்சி ஷார்ட், ஸ்மித், ஸ்டார்க், ஸ்டோய்னிஸ், ஸ்வெப்சன், அன்ட்ரூ டை, மத்யூ வேட், டேவிட் வோர்னர், அடம் ஸம்பா.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# நான்கு அம்சக் கோரிக்கையை முன்வைத்து மன்னார் மாவட்டத் தாதியர்கள் போராட்டம்

நான்குஅம்சக்கோரிக்கைகளை முன்வைத்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமை யாற்றும் தாதியர்கள் மன்னார் பொது வைத்தியசாலை வளாகத்தில் நேற்று (திங்கட்கிழமை) காலை 11 மணி தொடக்கம் 12 மணிவரை அடையாள கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குறிப்பாக தாதியர்களுக்கு என அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள விசேட விடுமுறை தமக்கு வழங்கப்படுவது இல்லை எனவும், கர்ப்பிணித் தாதியர்களுக்கு விடுமுறை வழங்காமல்தொடர்ச்சியாகபணியில் ஈடுபடுத்துகின்றனர் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். மேலும் அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளும் தாதியர்கள் ஒழுங்கான முறையில் கிருமி தொற்று நீக்கவோ ஓய்வு எடுக்கவோ முறையான வசதி ஏற்படுத்தித் தரவில்லை எனவும் அவர்கள் குற்றம் சாட்டினர்.

அதேநேரம் வேறு மாவட்டங்களுக்கு பணியின் நிமித்தம் செல்லும் அம்புலன்ஸ் சாரதிகளுக்கோ மேலதிக கடமை மேற்கொள்ளும் தாதியர்களுக்கோ தங்குவதற்கு ஓய்வு விடுதியோ அல்லது சாதாரண அறையோ ஒழுங்கு செய்து தரப்படவில்லை எனவும் கவலை வெளியிட்டனர். குறித்த பிரச்சினைகளை மன் னார் பொது வைத்தியசாலை பணிப் பாளரிடம் பல்வேறுமுறை சுட்டிக் காட்டியும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் இந்த வாரத்துக்குள் தீர்வு பெற்றுத் தரா விட்டால் இலங்கை முழுவதும் போராட்டங்களை முன்னெடுக்கப் போகின்றோம் எனவும் தெரிவித்துள்ளனர்.



# ஈஸ்டர் தாக்குதலுக்கு பின்னால் பெரும் சதி

## மனம் திறக்கிறார் சட்டமா அதிபர்

2019 ஏப்ரல் தாக்குதல்களுக்குப் பின்னால் ஒரு பெரிய சதி உள்ளது என சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா தெரிவித்துள்ளார்.

எனவே 2019 ஏப்ரல் 21 தாக்குதல்கள் தொடர்பாக ஒரு முடிவை எட்டுவதற்கு முன்னர் சாட்சியங்கள் மற்றும் புலனாய்வு பிரிவின் தகவல்கள் சரியான முறையில் மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

நேரங்கள், இலக்குகள், இடங்கள், தாக்குதல்களின் முறை மற்றும் பிற தகவல்களுடன் அரச புலனாய்வு துறையின் தகவல்கள் ஒரு பெரிய சதித்திட்டம் இருந்ததற்கான சான்றாக இருப்பதாக கூறினார்.

தொலைக்காட்சி நிகழ்வு ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியில் கருத்து வெளியிட்டுள்ள அவர், இந்த பெரும் சதியில் ஈடுபட்டவர்களின் அடையாளங்கள் ஆதாரங்களின் மூலம் வெளிக்கொண்டுவர வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

மேலும் ஈஸ்டர் தாக்குதலின் முக்கிய சூத்திரதாரி நௌபர் மௌலவி என பொதுப்பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்த கருத்து தொடர்பாக பேசிய அவர், தாக்குதல்களை நடத்துவதற்கான சதித்திட்டத்தில் நௌபர் மௌலவி ஒரு முக்கிய நபராக இருந்தாலும் அவர் சூத்திரதாரி என்பதை உறுதிப்படுத்த முடியாது என சட்டமா அதிபர் தெரிவித்தார்.

# மேலும் ஒரு லட்சத்து 85 ஆயிரம் ஸ்புட்னிக் வி தடுப்பூசிகள் வரும்

ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி கொவிட் தடுப்பூசியின் அடுத்த கட்ட தொகை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு கிடைக்கவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அடுத்த கட்டமாக ஒரு லட்சத்து 85 ஆயிரம் தடுப்பூசிகள் இலங்கைக்கு கிடைக்கவுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புறக்கணிக்கப்பட்டது தமிழ் மொழி சுட்டிக்காட்டினார் சாணக்கியன் சீனத் தூதரகம் விரைந்து நடவடிக்கை




மும்மொழிக் கொள்கையைப் பின்பற்றுமாறு நாட்டில் இயங்கும் ஒரு சீன நிறுவனத்துக்கு இலங்கைக்கான சீனத் தூதரகம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

பெயர் பலகைகள் அமைக்கும் போது நாட்டின் உத்தியோகபூர்வ மொழிகள் புறக்கணிப்படுகின்றன என சமூக வலைத்தளங்களில் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

குறிப்பாக அண்மையில் சீன நிறுவனம் ஒன்று அமைத்துள்ள பெயர்பலகையில் தமிழ்மொழி இடம்பெறாதமையை கண்டித்து மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் டுவிட்டரில் பதிவொன்றைப் பகிர்ந்திருந்தார்.

இந்நிலையில் இதற்கு பதிலளித்த இலங்கையில் உள்ள சீன தூதரகம், தமது நிறுவன பெயர்பலகையை மாற்றியமைக்குமாறு ஜே.வி. கட்டடத் தள நிறுவனதுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

அத்தோடு இலங்கையில் உள்ள மும்மொழிக்கொள்கையை சீனா மதிப்பதாகவும் அதனையே சீன நிறுவனங்கள் பின்பற்ற வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும் சீன தேசிய அருங்காட்சியகத்தில் தமிழ்மொழி இணைக்கப்பட்டுள்ளமையையும் சுட்டிக்காட்டி சீனத் தூதரகம் டுவிட்டரில் பதிவிட்டுள்ளது.

# கொரோனாவினைக் கண்டு பயப்படுவது எமது பலவீனம்

## ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

பெருந்தோட்ட பகுதிகளில் மூடப்பட்டுள்ள தோட்ட தொழிற்சாலைகளைகொவிட்சிகிச்சைநிலையங்களாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சரும் இ.தொ.கா .பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்,

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

கொரோனாவைக் கண்டு பயப்படுவதே எமக்குள்ள பலவீனம். அந்த பயத்தை ஒழித்தால் அதனை கட்டுப்படுத்த முடியும். மறுபக்கத்தில் மலையக மக்கள் உள்ளிட்ட அனைவரும் சுகாதார வழி முறைகளை உரியவாறு கடைப்பிடிக்க வேண்டியது அவசியம்.

தேயிலை தோட்டங்களில் உற்பத்தியை அதிகரித்தால் மாத்திரமே சம்பள உயர்வை வழங்க முடியும். அதற்காக இரண்டு கைகளை மாத்திரம் கொண்டுள்ள தொழிலாளி ஒருவருக்கு முடியுமான அளவே பறிக்க முடியும்.30 ஆம் திகதி மேலதிக கொழுந்து பறித்தல் உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என நம்புகின்றேன். கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட தொழிலாளி பணிக்குச் செல்ல முடியாது. மாகாண சபைத் தேர் தல் தொடர்பில் அடுத்த மாதமளவில் ஏற்கனவே உள்ள தேர்தல் முறைமைக்கு அமைய ஓர் அறிக்கையைத் தயார் செய்து சமர்ப்பிக்க எதிர்பார்க்கின்றோம்.

இந்த வருட முடிவுக்குள் அந்த அறிக்கையை சமர்பிக்கவுள்ளோம். அடுத்தது கொரோனாவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படுகின்றது. தேசிய வேலைத் திட்டத்திற்கு அமைய செயற்பட்டு வருகின்றோம். – என்றார்.

# தனிமைப்படுத்தல் மீறிய 223 பேர் கைதாகினர்

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டு தொடர்பில் கடந்த 24 மணித்தியாலயத்தில் 223 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடக பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

அத்துடன் அடையாள அட்டையின் இறுதி இலக்க நடைமுறையை மீறியமை தொடர்பில் 141 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கல் விழுந்ததில் இளைஞன் சாவு

மாகொடை–உடுகம வீதியின் குருபனாவ பிரதேசத்தில், வீதிக்கு அருகில் உள்ள பாதுகாப்பு சுவரின் கல் ஒன்று அங்கு அபிவிருத்தி பணியில் இருந்த இளைஞன் மீது விழுந்துள்ளதில் குறித்த இளைஞன் உயிரிழந்துள்ளார்.

சுமார் ஒரு மணித்தியாலங்களின் பின்னர் இளைஞன் மீட்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், வைத்தியசாலையில் சேர்க்கப்படும் போது அவர் உயிரிழந்து விட்டார் என மேலும் தெரிவிக்கப்படுகிறது.

19 வயதுடைய இளைஞன் ஒருவனே இவ்வாறு உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் தேசிய மக்கள் முன்னணி பிரமுகரிடம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விசாரணை

பயங்கரவாத தடுப்பு பிரிவினர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட முக்கியஸ்தரும் வன்னி தேர்தல் தொகுதி முன்னாள் வேட்பாளருமான எஸ்.தவபாலனிடம் நேற்று (திங்கட்கிழமை) விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

முள்ளிவாய்க்கால் நினைவு தின ஏற்பாடுகள், வெளிநாட்டு தொடர்புகள், அவரது குடும்ப உறுப்பினர்களது விவரம், பல்கலைக்கழகத்தில் செயற்பட்ட விதம் ஆகியவை தொடர்பாக அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த விசாரணை சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்றுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதே வேளை எஸ்.தவபாலன், பல்வேறு சமூக சேவைகள் மற்றும் தமிழர் நலன்சார் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பிரதேசசபை உறுப்பினர் தாக்கினார் எனக்கூறி கிராம உத்தியோகத்தர் வைத்தியசாலையில்!

உக்குவெல பிரதேச சபை பெண் உறுப்பினர் ஒருவர் குறித்த பிரதேசத்தின் பெண் கிராம உத்தியோகத்தர் ஒருவரை தாக்கியுள்ளார் எனக் கூறப்படுகிறது.

கொவிட் தடுப்புத் திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களை விநியோகிக்கும் பட்டியலில் தனது உறவினர்களின் பெயர்களை சேர்க்குமாறு தெரித்த குறித்த பெண் பிரதேச சபை உறுப்பினரின் கோரிக்கையை நிராகரித்தமை தாக்குதலுக்கு காரணமாகி உள்ள தாகத் தெரிவிக்கப்ப டுகிறது.



தாக்குதலுக்கு உள்ளான பெண் கிராம உத்தியோகத்தர் தற்போது சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், குற்றம் சுமத்தப்பட்டுள்ள பிரதேச சபை உறுப்பினரை கைது செய்யுமாறு கோரி உக்குவெல பிரதேச செயலகத்தின் கீழ் பணி புரியும் அனைத்து கிராம உத்தியோகத்தர்களும் நேற்று (திங்கட்கிழமை) பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.